[6th August 1966

*** 167 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி தாலூகா பங்கீட்டு அதிகாரி, தாசில்தார் ஆகியோர்கள் நியமிக்கும் சர்க்கார் கொள்முதல் ஏஜண்டுகள் கொள்முதல் செய்யும் நெல்லை, திருவோணம், அம்மானிப்பட்டு செக்போஸ்ட்டுகள் வழியாக எடுத்துச்செல்ல தஞ்சை மாவட்ட அதிகாரிகள் அனுமதிப்பதில்லை என்பது அண்மையில் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஏறக்குறைய ஆறு ரெவின்யூ கிராமங்கள் காவேரிப் பாசனத்தினால் விளையக்கூடியவையாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலிருந்து புதுக்கோட்டை, ஆலங்குடி பகுதிகளுக்கு நெல் கொண்டுபோகவேண்டும் என்றால், தஞ்சை மாவட்டத்திலேயே இரண்டு செக்போஸ்ட்டுகள் இருக்கின்றன. அதைத் தாண்டித்தான் வரவேண்டும். இது கனம் உணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே இப்படிப்பட்ட இடங்களில் உள்ள நிலையைப் போக்க இரண்டு மாவட்டக் கலெக்டர்களையும் ஒன்றாக ஆலோசனை செய்து, பெர்மிட்களுடன் நெல் கொண்டு செல்ல அனுமதி கொடுப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : வெளியிடங்களிலிருந்து உற்பத்தி செய்கின்றவர்கள், தங்கள் தானியங்களைக் கொண்டுவருவதற்கு அங்கங்கு இருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகள். அல்லது சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் இவர்களிடமிருந்து பெர்மிஷன் வாங்கிக் கொள்ளலாம். ஆனால், இதை வைத்துக்கொண்டு வேறு இடங் களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கவேண்டியிருப்பதால்தான் செக்போஸ்ட்டுகள் வைக்கவேண்டியிருக்கிறது.

திரு. பி. முருகையன் : இந்த இடங்களிலிருக்கின்ற தாலூகா அதிகாரிகள் பெர்மிட் கொடுத்தாலும், அடுத்த தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கின்ற அதிகாரிகள் அதை அனுமதிக்க மறுக் கிறார்கள். வேறு இடங்களுக்குக் கொண்டுபோகின்றவர்களைத் தடுப்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், சர்க்கார் அனுமதிபெற்ற வியாபாரிகளும், விவசாயிகளும் தங்கள் சொந்த தானியங்களை பெர்மிஷனோடு கொண்டுவந்தாலும் தடைசெய்வதை தடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா. இதைப்பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குத்தான் கொண்டுபோகக்கூடாது, அந்த ஜில்லா வுக்குள் கொண்டு போகலாம் என்று மதுரை, இராமநாதபுரம்

6th August 1966]

கலெக்டர்கள் அறிக்கையும் விட்டார்கள். ஆனால், இப்போது அங்குள்ள அதிகாரிகள் தானியங்கள் ஜில்லாவுக்குள்ளே கொண்டு போனாலும் பிடிக்கிறார்கள். இதனால் ஜனங்கள் மிகவும் பீதி அடைந்திருக்கிறார்கள். இதற்கு ஏதாவது பரிகாரம் ஏற்படுத்து வார்களா ?

கனம் திரு. வெ. ராமையயா : இது ஆலங்குடியைப்பற்றிய கேள்வி. ஜில்லாவுக்குள் கொண்டுபோகலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், கொள்முதல் நடைபெறுகிற நேரத்தில் சரியாகக் கொள்முதல் நடைபெறுவதற்காக ஜில்லாவுக்குள்ளேயும் தானியங்கள் நடமாட்டத்தை அவ்வப்போது இருக்கின்ற சூழ்நிலை களுக்கு ஏற்ப அதிகாரிகள் தடை செய்வார்கள்.

K.— ஆடூர் கண்ணங்குடிச் சாலை அபிவிருத்தி

*168 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா K- ஆடூர் கிராமத்திற்கும், கண்ணங் குடிக்கும் நடுவில் இருக்கும் ஹைவேஸ் ரோடை சீர் செய்ய வேண்டி அரசாங்கத்திற்கு அண்மையில் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) : A representation from the Chairman, K-Adur Panchayat, for metalling a portion of the Ponneri taluk bund road, which connects K-Adur and Kannankudi, was received in January 1965. It was found not possible to take up the work for want of funds.

Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act.

*169 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any representation from certain members of the Legislative Assembly on 1st February 1966 regarding the jurisdiction of Civil Courts to decide the correctness or otherwise of the classification of lands as Government assessed waste under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) After careful examination of the representation the Government came to the conclusion that it was not necessary to amend the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, in the manner suggested by the M.L.As. The members have been already informed of this decision.